செ.வெ.எண்: 19/2021 நாள்:08.09.2021

**திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று எண்ணிக்கையை பொறுத்து விநாயகர் சதுர்த்திவிழாயினை பொதுமக்கள் தங்களது வீடுகளிலேயே கொண்டாட வேண்டும்.**

**பொதுமக்கள் கட்டாயம் சமூக இடைவெளி உள்ளிட்ட கொரோனா தடுப்பு வழிமுறையை பின்பற்ற வேண்டும்.**

**சமய விழாக்கள் கொண்டாடுவதற்கான ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்டஆட்சியர் டாக்டர்.சு.வினீத், இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

திருப்பூர் மாவட்ட அலுவலக கூட்டரங்கில் சமய விழாக்கள் கொண்டாடுவதற்கான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

***இதுகுறித்து திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.சு.வினீத், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தாவது***

கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை பொறுத்து தமிழ்நாட்டில் எதிர்வரும் 15-ம் தேதி வரை கொண்டாடப்பட உள்ள சமயவிழாக்களுக்கு கட்டப்பாடுகள் விதிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, விநாயகர் சதுர்த்திவிழா தொடர்பாக பொது இடங்களில் விழா கொண்டாடுவதற்கும் அனுமதி மறுக்கப்படுகிறது. மேலும், சிலைகளை ஊர்வலமாக எடுத்து செல்வதற்கும், நீர்நிலைகளில் சிலைகளை கரைப்பதற்கும் அனுமதி கிடையாது. எனவே, பொதுமக்கள் தங்களது வீடுகளிலேயே விழாவை கொண்டாட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விநாயகர் சதுர்த்திவிழா தொடர்பாக தனிநபர்கள் தங்களது வீடுகளில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபடவும், தனி நபர்களாக சென்று அருகில்

உள்ள நீர்நிலைகளில் சிலைகளை கரைப்பதற்கும் அனுமதிக்கப்படுகிறது. மேலும், தனிநபர்களை தவிர அமைப்புகளுக்கு இந்த செயல்பாடுகளில் ஈடுபட முழுவதுமாக தடை செய்யப்படுகிறது.

தனிநபர்கள் தங்களது வீடுகளில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட சிலைகளை கோவில்களின் வெளிப்புறத்திலோ,சுற்றுப்புறத்திலோ வைத்துவிட்டு செல்லலாம். இந்த சிலைகள் இந்துசமய அறநிலையத்துறையினரால் முறைப்படி அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் கட்டாயம் சமூக இடைவெளி உள்ளிட்ட கொரோனா தடுப்பு வழிமுறையை பின்பற்ற வேண்டும். இந்த நடைமுறைகளை பின்பற்றாதவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

விழாவுக்கு தேவையான பூஜை பொருட்களை வாங்குவதற்காக கடைகள் மற்றும் சந்தைகளுக்கு செல்லும் போது, பொதுமக்கள் தவறாது முககவசம் அணிவதோடு சமூக இடை வெளியை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும்.

மேற்சொன்னவாறு, பொதுமக்கள் தத்தம் வீடுகளில் மட்டும் சமூக இடைவெளியை கடைபிடித்து விநாயகர்சதுர்த்தி விழாவினை சிறப்பிக்குமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.வினீத், இ.ஆ.ப.,தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**